# *அகில இலங்கைத் தமிழ்மொழித் தினம் - 2023*

***அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப் போட்டிகள் தொடர்பான கல்விச் செயலாளரின் 35/2018ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தின்***

## *2023ஆம் ஆண்டுக்கான இணைப்பு*

*தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை*
***தமிழ்மொழி அலகு***
*கல்வியமைச்சு*
*இசுருபாய*

எனது இல : ED 01/05/03/05/01
தமிழ் மொழி அலகு
கல்வி அமைச்சு
இசுருபாய
2023/ 03 / ..17

சகல மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

**அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டிகள் தொடர்பான கல்விச் செயலாளரின் 35/2018ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தின் 2023ஆம் ஆண்டுக்கான இணைப்பு**

01. 2023ஆம் ஆண்டுக்குரிய அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டிகள் யாவும், இவ் இணைப்பில் குறிப்பிடப்படும் விடயங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைவாகவும், சுற்றுநிருப இலக்கம் 35/2018 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாகவும் நடைபெறும்.

02. 2022ஆம் ஆண்டு 10,11,12,13 ஆகிய தரங்களுக்கு மாத்திரம் போட்டிகள் நடாத்தப்பட்டன. எனினும் 2023 ஆம் ஆண்டு தொடக்கம் மீளவும் சகல போட்டிகளையும் (50), தரம் 04 தொடக்கம் தரம் 13 வரையிலான சகல வகுப்புகளுக்கும் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. 2023ஆம் ஆண்டிற்குரிய போட்டிகள் நடாத்தப்பட வேண்டிய திகதிகள் பின்வருமாறு:

1. பாடசாலை மட்டப் போட்டிகள் - 2023.04.30 ஆம் திகதிக்கு முன்னர்
2. வலய மட்டப் போட்டிகள் - 2023.07.31 ஆம் திகதிக்கு முன்னர்
3. மாகாண மட்டப் போட்டிகள் - 2023.09.30 ஆம் திகதிக்கு முன்னர்

04. தேசிய மட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் **2023.10.10ஆம் திகதிக்கு முன்னர்** கல்வி அமைச்சின் தமிழ்மொழி அலகிற்கு அனுப்பப்படல் வேண்டும்.

05. 2023ஆம் ஆண்டுக்கான தேசிய மட்டப் போட்டிகள் யாவும் **2023.11.18,19 மற்றும் 2023.11.25,26** ஆகிய திகதிகளில் கொழும்பில் நடைபெறும்.

**இணைப்புகள் வழங்கப்பட்டுள்ள போட்டிகள் பற்றிய விபரங்கள்**

| தொ. இல | போட்டி இலக்கங்கள் | போட்டியின் பெயர் | பிரிவு/பிரிவுகள் |
|---|---|---|---|
| 1 | 20, 21, 22 | பேச்சு | 01, 02, 03 |
| 2 | 25, 26, 27, 28 | பாவோதல் | 01, 02, 03, 04 |
| 3 | 29 | இலக்கிய விமர்சனம் | 05 |
| 4 | 32 | இசையும் அசைவும் | 01 |
| 5 | 33, 34, 35, 36 | இசை - தனி | 02, 03, 04, 05 |
| 6 | 37, 38 | இசை - குழு | குழு – 1, குழு - 11 |
| 7 | 39, 40, 41, 42 | நடனம் - தனி | 02, 03, 04, 05 |
| 8 | 43 | நடனம் - குழு - 1 | குழு 1 |
| 9 | 44 | நாட்டிய நாடகம் | தி.போ |
| 10 | 46 | இலக்கிய நாடகம் | தி.போ |
| 11 | 47 | வில்லுப்பாட்டு | தி.போ |
| 12 | 50 | முஸ்லிம் நிகழ்ச்சி | தி.போ |

1. ***போட்டி இல : 20*** ***பேச்சு*** ***முதலாம் பிரிவு : தரங்கள் 04, 05***

***1.1 விடயத் தலைப்புகள் :***

1. *அச்சந் தவிர்*
2. *உழவின் பெருமை*
3. *அன்பே உலகாளும்*
4. *ஈத்துவக்கும் இன்பம்*

2. ***போட்டி இல : 21*** ***பேச்சு*** ***இரண்டாம் பிரிவு : தரங்கள் 06, 07***

***2.1 விடயத் தலைப்புகள் :***

1. *கைத்தொழில் போற்று*
2. *இணையவழி இணைவோம்*
3. *கற்றார் பெருமை*
4. *தொற்றா நோயிலிருந்து விடுதலை*

3. ***போட்டி இல : 22*** ***பேச்சு*** ***மூன்றாம் பிரிவு : தரங்கள் 08, 09***

***3.1 விடயப் பரப்பு :***

1. *ஊழ்வினை வந்துறுத்தும்*
2. *தமிழ் இலக்கியங்களில் மென் திறன்கள்*
3. *நவீன காலமும் அறிவியல் கல்வியும்*
4. *பரந்து கிடக்கும் தொழில் உலகு*

4. ***போட்டி இல : 25*** ***பாவோதல்*** ***முதலாம் பிரிவு : தரங்கள் 04, 05***

***4.1 விடயம்***

***4.1.1 திருக்குறள்*** : *அதிகாரம் - 10 : இனியவை கூறல்*

*(திருக்குறள் பகுதிகளுக்காக மு. வரதராசன் அவர்களின் உரை சிபாரிசு செய்யப்பட்டுள்ளது)*

***4.1.2 பாரதிதாசன் கவிதைகள்:*** ***இயற்கை - இயற்கைச் செல்வம்***

*விரிந்த வானே, வெளியே, - எங்கும்*
*விளைந்த பொருளின் முதலே,*
*திரிந்த காற்றும், புனலும், - மண்ணும்,*
*செந்தீ யாவும் தந்தோய்,*
*தெரிந்த கதிரும் நிலவும் - பலவாச்*
*செறிந்த உலகின் வித்தே,*
*புரிந்த உன்றன் செயல்கள் - எல்லாம்*
*புதுமை! புதுமை! புதுமை!*

***4.1.3 நாலடியார்*** : *பாடல் : 125* ***தீவினை அச்சம்***

*பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்*
*வரிசை வரிசையா நந்தும் - வரிசையால்*
*வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே*
*தானே சிறியார் தொடர்பு*

5. ***போட்டி இல : 26*** ***பாவோதல்*** ***இரண்டாம் பிரிவு : தரங்கள் 06, 07***

***5.1 விடயம்***

***5.1.1 திருக்குறள் :*** *அதிகாரம் - 14 : ஒழுக்கம் உடைமை*
*அதிகாரம் - 20 : பயன்இல சொல்லாமை*

*(திருக்குறள் பகுதிகளுக்காக மு. வரதராசன் அவர்களின் உரை சிபாரிசு செய்யப்பட்டுள்ளது)*

***5.1.2 பாரதிதாசன் கவிதைகள் :*** ***சோலை***

*விரைமலர்த் தேன்வண் டெல்லாம்*
*வீணையை மிழற்ற, ஆங்கே*
*மரங்கொத்திப் புட்கள் தாளம்*
*வகைப்படுத் திடத் தடாகக்*
*கரையினில் அலைகரங்கள்*
*கவின் மிருதங்கம் ஆர்ப்பக்*
*கருங்குயில் பாடத் தோகைக்*
*கணிகை நின்றாடும் சோலை!*

***5.1.3 ஆசாரக்கோவை :*** ***பாடல் : 74***

*நின்றக்கால் நிற்க அடக்கத்தா லென்றும்*
*இருந்தக்கால் ஏவாமை ஏகார் பெருந்தக்கார்*
*சொல்லிற் செவிகொடுத்துக் கேட்டீக மீட்டும்*
*வினாவற்க சொல்லொழிந்தக் கால்*

6. ***போட்டி இல : 27*** ***பாவோதல்*** ***மூன்றாம் பிரிவு : தரங்கள் 08, 09***

***6.1 விடயம்***

***6.1.1 திருக்குறள் :*** *அதிகாரம் - 23 : ஈகை*
*அதிகாரம் - 60 : ஊக்கம் உடைமை*

*(திருக்குறள் பகுதிகளுக்காக மு. வரதராசன் அவர்களின் உரை சிபாரிசு செய்யப்பட்டுள்ளது)*

***6.1.2 பாரதியார் கவிதைகள் :*** ***பாரதியார் சுயசரிதை – பொருட்பெருமை***

*'பொருள் இலார்க்கிலை இவ்வுலகு' என்றநம்*
*புலவர் தாய்மொழி பொய்ம்மொழி அன்றுகாண்*
*பொருள் இலார்க்குஇனம் இல்லை துணையில்லை*
*பொழுதெ லாம்இடர் வெள்ளம்வந் தெற்றுமால்*
*பொருளி லார்பொருள் செய்தல் முதற்கடன்*
*போற்றிக் காசினுக்கு ஏங்கி உயிர்விடும்*
*மருளர் தம்மிசை யேபழி கூறுவன்*
*மாமகட்கு இங்கொரு ஊனம் உரைத்திலன்*

*அறமொன் றேதரும் மெய்யின்பம் என்றநல்*
*அறிஞர் தம்மை அனுதினம் போற்றுவேன்*
*பிற விரும்பி உலகினில் யான்பட்ட*
*பீழை எத்தனை கோடி! நினைக்கவும்*
*திறன்அ ழிந்தென் மனம்உடை வெய்துமால்*
*தேசத் துள்ள இளைஞர் அறிமினோ!*
*அறமொன் றேதரும் மெய்யின்பம் ஆதலால்*
*அறனை யேதுணை என்றுகொண் டுய்திரால்*

***6.1.3 ஏலாதி : பாடல் 47***

*பெரியார் சொல் பேணி, பிறழாது நின்று,*
*பரியா அடியார்ப் பறியான், கரியார் சொல்*
*தேறான், இயையான், தெளிந்து அடிசில் ஈத்து உண்பான்*
*மாறான், மண் ஆளுமாம் மற்று*

***6.1.4 இனியவை நாற்பது : பாடல் 01***

*பிச்சை புக்குஆயினும் கற்றல் மிக இனிதே*
*நல் சபையில் கைக்கொடுத்தல் சாலவும் முன் இனிதே*
*முத்து ஏர் முறுவலார் சொல் இனிது: ஆங்கு இனிதே*
*தெற்றவும் மேலாயார்ச் சேர்வு*

7. ***போட்டி இல : 28 பாவோதல் நான்காம் பிரிவு : தரங்கள் 10, 11***

***7.1 விடயம்***

***7.1.1 திருக்குறள் :*** *அதிகாரம் - 65 : சொல் வன்மை*
*அதிகாரம் - 76 : பொருள் செயல்வகை*

*(திருக்குறள் பகுதிகளுக்காக மு. வரதராசன் அவர்களின் உரை சிபாரிசு செய்யப்பட்டுள்ளது)*

***7.1.2 பாரதியார் கவிதைகள் : யோகசித்தி எனும் பகுதியில்***

*தேடிச் சோறுநிதந் தின்று – பல*
*சின்னஞ் சிறுகதைகள் பேசி – மனம்*
*வாடித் துன்பம்மிக உழன்று – பிறர்*
*வாடப் பலசெயல்கள் செய்து – நரை*
*கூடிக் கிழப் பருவம் எய்தி – கொடுங்*
*கூற்றுக்கு இரையெனப்பின் மாயும் - பல*
*வேடிக்கை மனிதரைப் போலே – நான்*
*வீழ்வேன் என்று நினைத் தாயோ?*

*நின்னைச் சிலவரங்கள் கேட்பேன் - அவை*
*நேரே இன்றெனக்குத் தருவாய் - என்றன்*
*முன்னைத் தீவினைப் பயன்கள் - இன்னும்*
*மூளா தழிந்திடுதல் வேண்டும் - இனி*
*என்னைப் புதியஉயிர் ஆக்கி – எனக்கு*
*ஏதுங் கவலையறச் செய்து – மதி*
*தன்னை மிகத்தெளிவு செய்து – என்றும்*
*ஸந்தோ'ங் கொண்டிருக்கச் செய்வாய்.*

***7.1.3 கம்பராமாயணம் : ஆரணிய காண்டம்***

***பாடல் : 888***

*மலையே மரனே மயிலே குயிலே*
*கலையே பிணையே களிறே பிடியே*
*நிலையா உயிரே நிலைநேடி னர்போய்*
*உலையா வலியார் உழைநீர் உரையீர்*

***பாடல் : 889***

*செஞ்சே வகனார் நிலைநீர் தெரிவீர்*
*மஞ்சே பொழிலே வனதே வதைகாள்*
*அஞ்சேல் எனநல் குதிரேல் அடியேன்*
*உஞ்சால் அதுதான் இழிபோ உரையீர்*

***7.1.4 நளவெண்பா : பாடல் : 45 எதனை நாடினாய்?***

*மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற*
*அன்னம்போய்க் கன்னி அருகணைய – நன்னுதலும்*
*தன்னாடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை*
*என்னாடல் சொல்லென்றாள் ஈங்கு*

***7.1.5 மதுரைக்காஞ்சி : மன்னர், மன்னனாக விளங்கிய பெருமை***
***பாடல் : 62 – 69 வரையான அடிகள்***

*மரந்தின்னூஉ வரையுதிர்க்கு*
*நரையுருமி னேறனையை*
*யருங்குழுமிளைக் குண்டுகிடங்கி*
*னுயர்ந்தோங்கிய நிரைப்புதவி … (65)*

*னெடுமதி னிரைஞாயி*
*லம்புமி ழயிலருப்பந்*
*தண்டாது தலைச்சென்று*
*கொண்டுநீங்கிய விழுச்சிறப்பிற்*

8. ***போட்டி இல : 29 இலக்கிய விமர்சனம் ஐந்தாம் பிரிவு : தரங்கள் 12, 13***

***8.1 விடயம்***

***8.1.2 புதுக்கவிதை : கோடுகளும் சித்திரங்களே***
***கவிஞர் வைரமுத்து***

*என்*
*பாதங்களுக்குக் கீழே*
*பூக்கள் இல்லை*
*மொய்த்துக் கிடந்தவை*
*முட்களே.*
*எனினும்*
*ரத்தம் துடைத்து*
*நடந்து வந்தேன்.*

*என்னைத்*
*தடவிச் சென்றது*
*தெற்கே குளித்து வந்த*
*தென்றல் அல்ல*
*நுரையீரல்களை*
*கார்பன் தாள்களாய்க்*
*கறுக்க வைக்கும்*
*கந்தகக்காற்று*
*இருந்தும்*
*சுடச்சுடவே*
*நான்*
*சுவாசித்து வந்தேன்*

*ஆண்டு முழுவதும் இருந்த*
*அக்கினி நட்சத்திரத்தில்*
*எரிந்து போயிற்று*
*எனது குடை*
*ஆயினும்*
*என்*
*நிழலின் நிழலிலேயே*
*நீண்ட தூரம் ஒதுங்கி வந்தேன்*

*ஆண்டு முழுவதும் இருந்த*
*அக்கினி நட்சத்திரத்தில்*
*எரிந்து போயிற்று*
*எனது குடை*
*ஆயினும்*
*என்*
*நிழலின் நிழலிலேயே*
*நீண்ட தூரம் ஒதுங்கி*
*வந்தேன்*

*என்*
*தலைக்கு மேலே*
*பருந்துகள் எப்போதும்*
*பறந்துகொண்டிருந்ததால்*
*நான் இன்னும்*
*செத்துவிடவில்லை*
*என்பதை*
*நித்தம் நித்தம்*
*நிரூபிக்க வேண்டியதாயிற்று*

*என் நிர்வாணத்தை*
*ஒரு கையால்*
*மறைத்துக்கொண்டு*
*என்*
*அடுத்த கையால்*
*ஆடை நெய்து*
*அணிந்து கொண்டேன்*

*இன்று –*
*என்*
*பிரவாகம் கண்டு கரைகள்*
*பிரமிக்கலாம்*
*ஆனால் -*
*இந்த நதி*
*பாலைவனப் பாறைகளின்*
*இடுக்கில் கசிந்துதான்*
*இறங்கி வந்தது*
*தனது*
*சொந்தக் கண்ணீரும்*
*சுரந்ததால்*
*இரட்டிப்பானது*
*இந்த நதி*

*இந்த விதை*
*தன்மேல் கிடந்த*
*பாறைகளை*
*முட்டி முட்டியே*
*முளைத்துவிட்டது*

*இன்று என்*
*புண்களை மூடும்*
*பூக்களினால்*
*நான்*
*சமாதானம் அடைவது*
*சாத்தியமில்லை*
*இந்தச்*
*சமூக அமைப்பு*
*எனக்குச்*
*சம்மதமில்லை*

*சரிதம் என்பது*
*தனி ஒரு*
*மனிதனின்*
*அறிமுக அட்டையோ…?*
*அல்ல*
*அது*
*முடிவைத்தேடும்*
*ஒரு சமூகத்தின்*
*மொத்த விலாசம்*

*இதுவோ…*
*ரணத்தோடு வாசித்த*
*சங்கீதம்…*
*எனது*
*ஞாபக நீரோடையின்*
*சலசலப்பு…*
*நசுங்கிய*
*நம்பிக்கைகளுக்கு*
*என்*
*பேனாவிலிருந்தொரு*
*ரத்ததானம்*

*இதில்*
*சில நிஜங்களைச்*
*சொல்லவில்லை என்பது*
*நிஜம்*
*ஆனால் -*
*சொன்னதெல்லாம் நிஜம்*

*நான்*
*வரைய நினைத்தது*
*சித்திரம்தான்*
*வந்திருப்பவை*
*கோடுகளே*
*ஆனால் -*
*கோடுகளும்*
*சித்திரங்களே!*

*மனித நேசம்தான்*
*வாழ்க்கை என்பதை*
*அறிய வந்தபோது*
*என்*
*முதுகில் கனக்கிறது*
*முப்பது வயது.*

***8.1.1 குறுந்தொகை : 224ம் பாடல் - பாலை - தலைவி கூற்று***
***பாடியவர் - கூவன் மைந்தனார்***

*கவலை யாத்த அவல நீளிடைச்*
*சென்றோர் கொடுமை யெற்றித் துஞ்சா*
*நோயினு நோயா கின்றே கூவற்*
*குராலான் படுதுயர் இராவிற் கண்ட*
*உயர்திணை ஊமன் போலத்*
*துயர்பொறுக் கல்லேன் தோழி நோய்க்கே.*

9. ***போட்டி இல : 32 இசையும் அசைவும் முதலாம் பிரிவு : தரங்கள் 04, 05***

***9.1 விடயம் :*** ***'உறவுகள்'*** *எனும் தலைப்பில் புதிய ஆக்கப்பாடல் ஒன்றினை ஆக்கம் செய்து அபிநயத்தல்.*

***9.2 நேரம் :*** *4 – 5 நிமிடங்கள்*

***9.3 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

***9.2 குறிப்பு***

- *இசையும் அசைவும் போட்டியில் பங்குகொள்ளும் போட்டியாளர்கள் பாடசாலை சீருடையுடன் மாத்திரமே பங்குகொள்ளல் வேண்டும்.*
- *கழுத்துப்பட்டி அணிய முடியாது. (போட்டி இடம்பெறும் போது பாதணிகள் அணிய முடியாது)*

10. ***போட்டி இல : 33 இசை – தனி இரண்டாம் பிரிவு : தரங்கள் 06, 07***

***10.1 விடயம் :***

*''**குன்றின் மீது நின்று கண்டேன்**'' என்ற பாரதிதாசன் பாடலினை விரும்பிய ஒரே இராகத்திலும், ஒரே தாளத்திலும் பாடுதல். (**சிட்டைஸ்வரம், தாளம், நடை, கதிபேத மாற்றங்கள் முற்றாக தவிர்க்கப்படவேண்டும்**). புதிய இசையமைப்பில் இசையமைத்து பாடப்படவேண்டும். நேரத்திற்கேற்ப பாடல் வரிகளைத் தெரிவுசெய்யலாம்.*

10.2 ***நேரம் : 04 - 05 நிமிடங்கள்***

***10.3 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

*குன்றின் மீது நின்று கண்டேன்*
*கோலம்! என்ன கோலமே!*
*பொன் ததும்பும் 'அந்திவானம்'*
*போதந் தந்ததேடி தோழி! (குன்றின்)*

*முன்பும் கண்ட காட்சி தன்னை*
*முருகன் என்றும் வேலன் என்றும்*
*கொன் பயின்றார் சொல்வார்: அ்.து*
*குறுகும் கொள்கை அன்றோ தோழி! (குன்றின்)*

*கண்ணும் நெஞ்சம் கவருகின்ற*
*கடலை, வானைக் கவிஞர் அந்நாள்*
*வண்ண மயில் வேலோன் என்றார்கள்.*
*வந்ததே போர் இந் - நாள் - தோழி! (குன்றின்)*

*எண்ண எண்ண இனிக்கும் காட்சிக்*
*கேது கோயில்? தீபம் ஏனோ!*
*வண்ணம் வேண்டில் எங்கும் உண்டாம்*
*மயில வெற்பும் நன்-றே-தோ-ழி! (குன்றின்)*

*பண்ண வேண்டும் பூசை என்பார்*
*பாலும் தேனும் வேண்டும் என்பார்*
*உண்ண வேண்டும் சாமி என்பார்*
*உள்ளத்தில் அன்பு வேண் - டார் - தோ – ழி (குன்றின்)*

*அன்பு வேண்டும் அ.்.து யார்க்கும்*
*ஆக்கம் கூட்டும் ஏக்கம் நீக்கும்!*
*வன்பு கொண்டோர் வடிவு காட்டி*
*வணங்க என்று சொல் - வார் - தோ – ழி (குன்றின்)*

*என்பும் தோலும் வாடுகின்றார்*
*'ஏழை' என்ப தெண்ணார் அன்றே!*
*துன்பம் நீக்கும் மக்கள் கொண்டு*
*சூழ்க வையம் தோ – ழி – வா – ழி (குன்றின்)*

11. ***போட்டி இல : 34 இசை – தனி மூன்றாம் பிரிவு : தரங்கள் 08, 09***

***11.1 விடயம்***

*தமிழ் வாக்கேயகாரர்களான **பாபநாசம் சிவன் அல்லது முத்துத்தாண்டவர்** அவர்களால் இயற்றப்பட்ட தமிழ் மத்திம கால கீர்த்தனை ஒன்றினைப் பாடுதல். தேவைக்கேற்ப சங்கதிகளை சேர்த்துக்கொள்ள முடியும். சிட்டைஸ்வரம், தாளம், நடை, கதிபேத மாற்றங்கள் முற்றாக தவிர்க்கப்படவேண்டும்.*

***11.2 நேரம் :*** *05 – 06 நிமிடங்கள்*

***11.3 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

12. ***போட்டி இல : 35 இசை – தனி நான்காம் பிரிவு : தரங்கள் 10, 11***

***12.1 விடயம்***

*கீரவாணி, பூர்விகல்யாணி, கானடா, பிலஹரி, ஆரபி ஆகிய இராகங்களில் அமைந்த தமிழ் மத்திம கால கீர்த்தனை ஒன்றினை சிட்டைஸ்வரத்துடன் பாடுதல். சிட்டைஸ்வரம் இல்லாத கீர்த்தனைகளுக்கு சிட்டைஸ்வரத்தினை ஆக்கம் செய்யலாம். தாளம், நடை, கதிபேத மாற்றங்கள் முற்றாக தவிர்க்கப்படவேண்டும்.*

***12.2 நேரம் :*** *06 – 08 நிமிடங்கள்*

***12.3 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

13. ***போட்டி இல : 36 இசை – தனி ஐந்தாம் பிரிவு : தரங்கள் 12, 13***

***13.1 விடயம்***

*ஒரு இராக தாளத்தில் அமைந்த தமிழ் மத்திமகால கீர்த்தனையினை தெரிவு செய்து, அக் கீர்த்தனை அமைந்துள்ள இராகத்தினை ஆலாபனை செய்து, கீர்த்தனையினைப் பாடி, பொருத்தமான இடத்தில் நிரவல்செய்து, அவ் இடத்தில் முதலாம், இரண்டாம் காலத்தில் கற்பனாஸ்வரங்களைப் பாடுதல்.*

***13.2 நேரம் :*** *12 – 15 நிமிடங்கள்*

***13.3 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

14. ***போட்டி இல : 37*** ***இசை – குழு - I*** ***தரங்கள் 06, 07, 08, 09***

### 14.1 விடயம்

*மகாகவி பாரதியார் அவர்களின் "**பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே**" என்ற பாடலை இராகமாலிகையாகப் பாடுதல். குறைந்தது நான்கு இராகங்களாவது இருத்தல் வேண்டும். சிட்டைஸ்வரங்கள் இடம்பெறலாம். நேரத்திற்கேற்ப பாடல் வரிகளை தெரிவுசெய்யலாம். புதிய இசையமைப்பாக இருத்தல் வேண்டும். இராகங்களுக்குள் இராகக்கலப்பு இருத்தலாகாது.*

***14.2 நேரம் :*** *06 – 08 நிமிடங்கள்*

***14.3 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

*பகைவனுக் கருள்வாய் - நன்னெஞ்சே*
*பகைவனுக் கருள்வாய்*

1. *புகைநடுவினில் தீயிருப்பதைப்*
*பூமியிற் கண்டோமே – நன்னெஞ்சே*
*பூமியிற் கண்டோமே.*
*பகைநடுவினில் அன்புரு வானநம்*
*பரமன் வாழ்கின்றான் - நன்னெஞ்சே*
*பரமன் வாழ்கின்றான். (பகைவனுக்)*

2. *சிப்பியிலே நல்ல முத்து விளைந்திடுஞ்*
*செய்தி யறியாயோ – நன்னெஞ்சே*
*குப்பையிலே மலர் கொஞ்சுங் குரக்கத்திக்*
*கொடிவள ராதோ? – நன்னெஞ்சே (பகைவனுக்)*

3. *உள்ள நிறைவிலொர் கள்ளம் புகந்திடில்*
*உள்ள நிறைவாமோ? – நன்னெஞ்சே*
*தெள்ளிய தேனிலொர் சிறிது நஞ்சையும்*
*சேர்த்தபின் தேனாமோ? – நன்னெஞ்சே (பகைவனுக்)*

4. *வாழ்வை நினைத்தபின் தாழ்வை நினைப்பது*
*வாழ்வுக்கு நேராமோ? – நன்னெஞ்சே*
*தாழ்வு பிறர்க்கெண்ணத் தானழி வானென்ற*
*சாத்திரங் கேளாயோ? – நன்னெஞ்சே (பகைவனுக்)*

5. *போருக்கு வந்தங் கெதிர்த்த கவுரவர்*
*போல வந் தானுமவன் - நன்னெஞ்சே*
*நேருக் கருச்சுனன் தேரிற் கசைகொண்டு*
*நின்றதுங் கண்ண னன்றோ? – நன்னெஞ்சே (பகைவனுக்)*

6. *தின்ன வரும்புலி தன்னையு மன்பொடு*
*சிந்தையிற் போற்றிடுவாய் - நன்னெஞ்சே*
*அன்னை பராசக்தி யவ்வுரு வாயினள்*
*அவளைக் கும்பிடுவாய் - நன்னெஞ்சே (பகைவனுக்)*

15. ***போட்டி இல : 38*** ***இசை – குழு - II*** ***தரங்கள் 10, 11, 12, 13***

### 15.1 விடயம்

*விரும்பிய ஒரு தமிழ் ஆதி தாள வர்ணத்தினை ஒரே இராகத்தில் பாடுதல், பூர்வாங்கம், உத்தராங்கம் இரண்டினையும் இரண்டு காலங்களிலும் பாடுதல் வேண்டும். அத்துடன் தமிழ் மொழியில் அமைந்த பதம் ஒன்றினை பாடுதல் வேண்டும்.*

***15.2 நேரம் :*** *10 – 12 நிமிடங்கள்*

***15.3 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

16. ***போட்டி இல : 39 நடனம் – தனி இரண்டாம் பிரிவுதரங்கள் 06, 07***

***16.1. விடயம் : கீர்த்தனை***

*பாடல் : சின்னஞ்சிறு பெண் போலே...*
*பாடல் இயற்றியவர் : உளுந்தூர்பேட்டை சண்முகம்*
*இராகம் : சிந்துபைரவி*
*தாளம் : ஆதி*

*சின்னஞ்சிறு பெண் போலே சிற்றாடை இடை உடுத்தி*
*சிவகங்கை குளத்தருகே ஸ்ரீதுர்க்கை சிரித்திருப்பாள்*
*பெண்ணவளின் கண்ணழகை பேசி முடியாது*
*பேரழகுக்கீடாக வேறொன்றும் கிடையாது* II

*மின்னலைப் போல் மேனி அன்னை சிவகாமி*
*இன்பமெல்லாம் தருவான் எண்ணமெல்லாம் நிறைவாள்*
*பின்னல் சடை போட்டு பிச்சிப்பூ சூடிடுவாள்*
*பித்தனுக்கு இணையாக நர்த்தனம் ஆடிடுவாள்* II

***16.2. பொதுவான விதிகள் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***
***16.3. நேரம் :*** *05 – 06 நிமிடங்கள்*
***16.4. புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

17. ***போட்டி இல : 40 நடனம் – தனி மூன்றாம் பிரிவு தரங்கள் 08, 09***

***17.1. விடயம் : கீர்த்தனை***

*பாடல் : சபாபதிக்கு வேறு தெய்வம்*
*பாடல் இயற்றியவர் : கோபாலகிரு'ண பாரதி*
*இராகம் : ஆபோகி*
*தாளம் : ரூபகம்*

***பல்லவி***
*சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா?*
*தில்லை சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா?*

***அனுபல்லவி***
*கிருபாநிதி இவரைப் போல*
*கிடைக்குமோ இந்த தாரணி தன்னில்*

***சரணம்***
*ஒரு தரம் சிவசிதம்பரம் என்று உரைத்தால் போதுமே*
*பரகதிக்கு வேறு புண்ணியம் பண்ண வேண்டுமா?*
*அரிய புலையர் மூவர் பதம் அடைந்தார் என்றே புராணம்*
*அறிந்து சொல்ல கேட்கும் கோபால கிரு'ணன் பாடும் தில்லை*

***17.2. பொதுவான விதிகள் :***

*17.2.1. இந் நடனத்தில் அடவுகள், ஜதிகள், ஸ்வரக் கோர்வைகள் இடம்பெறலாம்.*
*17.2.2. நட்டுவாங்கத் தாளமும், பின்னணி இசையும் போதுமானவை.*
*17.2.3. அணிசேர் இசைக்கருவிகள் தவிர்க்கப்படல் வேண்டும்.*

*17.3.* ***நேரம்*** *: 06 – 08 நிமிடங்கள்*

*17.4.* ***புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

18. ***போட்டி இல : 41 நடனம் – தனி நான்காம் பிரிவு தரங்கள் 10, 11***

***18.1. விடயம் : பதம்***

*பாடல் : கல்யாண வசந்த மண்டபத்தில்*
*பாடல் இயற்றியவர் : பிரம்மஸ்ரீ வீரமணிஜயர்*
*இராகம் : கல்யாண வசந்தம்*
*தாளம் : ஆதி*

***பல்லவி***
*கல்யாண வசந்த மண்டபத்தில் - எந்தன்*
*கால் தூக்கி கண்ணன் அம்மிக் கல்லில் வைத்தானடி*

***அனுபல்லவி***
*எல்லாம் மறந்தேனடி ஏகனோடு இணைந்தேனடி*
*நல்லாயென் வெங்கடேசன் நாயகன் ஆனானடி*

***சரணம்***
*ஓமப்புகை நடுவே ஓரக்கண்ணால் பார்த்தேன்*
*கோமளப் புன்னகையால் குளைந்தானடி – நெஞ்சை*
*ஷியாமள வண்ணன் கண்ணன் சௌந்தர்ய லாவண்யன்*
*பூவளர் பொன்னாலைபதி புனித வரதராஜன்*

***18.2. பொதுவான விதிகள் :***

*18.2.1. இந் நடனத்தில் அடவுகள், ஜதிகள், ஸ்வரக்கோர்வைகள் இடம்பெறலாம்.*
*18.2.2. நட்டுவாங்கத் தாளமும், பின்னணி இசையும் போதுமானவை.*
*18.2.3. அணிசேர் இசைக்கருவிகள் தவிர்க்கப்படல் வேண்டும்.*

*18.3.* ***நேரம் : 06 – 08*** *நிமிடங்கள்*
*18.4.* **புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க**

19. ***போட்டி இல : 42 நடனம் – தனி ஐந்தாம் பிரிவு தரங்கள் 12, 13***

*19.1. விடயம் :*
*போட்டி நடைபெறும் இடத்தில் வழங்கப்படும் தலைப்பை மையமாகக் கொண்டு நடனத்தை ஆக்கம் செய்து சமர்ப்பித்தல் வேண்டும்*

*19.2. குறிப்பு :*

*19.2.1. கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் நடனப் போட்டிகளுக்கான பொதுவான விதிகள் எனும் பகுதியைப் பார்க்கவும்*
*19.2.2. புல்லாங்குழல் அல்லது வயலின் பயன்படுத்த முடியும்.*

*19.3. நேரம் : முன்னாயத்தம் செய்வதற்கு 15 நிமிடங்கள் வழங்கப்படும்.*
*அபிநயித்தல் 05 – 07 நிமிடங்கள்*
*19.4. புள்ளித்திட்டம் :* **கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க.**

20. ***போட்டி இல : 43 நடனம் – குழு - I தரங்கள் 04,05,06,07,08,09***

*20.1 விடயம் :* ***பந்தாட்டம்***
***20.2*** *பெதுவான விதிகள் :* ***கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***
*20.3 நேரம் : 6 – 7 நிமிடங்கள்*
***20.4*** *புள்ளித்திட்டம் :* ***கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

21. **போட்டி இல : 44** **நாட்டிய நாடகம்** **திறந்த போட்டி**

***21.1*** விடயம் : ***கொடையிற் சிறந்த கர்ணன்***

*இக் கருத்தினை முன்னிலைப்படுத்தி கர்ணனின் கொடைச் சிறப்புக்களை விபரிக்கும் வகையில் மகாபாரதக் கதையில் வரும் காட்சிகளைச் சித்திரித்து நாட்டிய நாடகம் அமைக்கப்படுதல் வேண்டும்.*

*21.2* போட்டி விதிகள் :

*21.2.1* *கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க.*

*21.2.2* *உபகரணங்கள் எதுவும் பயன்படுத்தலாகாது ( உதாரணம் : வாள், கேடயம் போன்றன)*

*21.3* *நேரம்* : *18 – 20 நிமிடங்கள்*

*21.4* புள்ளித்திட்டம் : ***கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க.***

22. **போட்டி இல : 46** **இலக்கிய நாடகம்** **திறந்த போட்டி**

***22.1*** ***விடயம் :*** ***புறநானூறு : கல்வி அல்லது கொடைச் சிறப்பு***

***22.2*** ***குறிப்புகள் :***

*22.2.1* *புறநானூற்றுச் செய்யுள்களில் இடம்பெறும்* ***கல்வி அல்லது கொடைச்*** *சிறப்பினை வெளிப்படுத்தும் செய்யுள்/செய்யுள்களைத் தெரிவுசெய்து, அக்கருத்தினை மையக்கருவாகக் கொண்டு, நாடகப்பிரதி ஆக்கப்படல் வேண்டும்.*

*22.2.2* *நீங்கள் தெரிவுசெய்த செய்யுளின் பிரதான பாத்திரங்களுக்கு மேலதிகமான பாத்திரங்களை நாடகப் பிரதியாக்கத்திற்கு அமைவாக அமைத்துக்கொள்ள முடியும்.*

*22.2.3* *நீங்கள் தெரிவுசெய்த செய்யுள் / செய்யுள்கள், செய்யுள் எண், பாடியோர், திணை முதலிய தகவல்கள் நாடகப் பிரதியுடன் இணைக்கப்படல் வேண்டும்.*

*22.2.4* *நாடகப் பிரதி புத்தாக்கமுடையதாக இருத்தல் வேண்டும்.*

*22.3* ***போட்டி விதிகள் :*** ***கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க.***

*22.4* ***நேரம்*** : *30 நிமிடங்கள்*

*22.5* ***புள்ளித்திட்டம்*** : ***கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க.***

23. **போட்டி இல : 47** **வில்லுப்பாட்டு** **திறந்த போட்டி**

***23.1 விடயம்*** :

1. அணங்காகும் தான்செய்த பாவை தனக்கு - பழமொழி நானூறு
2. பெருக்கத்து வேண்டும் பணிதல் - திருக்குறள்

**குறிப்பு** :

*வில்லுப்பாட்டின் கதைப்பிரதி, தமிழ் இலக்கியமொன்றைத் தெரிவு செய்து, அதிலிருந்து எடுக்கப்பட்ட காட்சியை அடிப்படையாகக் கொண்டு விடயத் தலைப்பைப் பிரதிபலிக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும்.*

*23.2* போட்டி விதிகள் : ***கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க.***

*23.3* *நேரம்* : *20 நிமிடங்கள்*

*23.4* புள்ளித்திட்டம் : ***கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க.***

24. ***போட்டி இல : 48*** ***முஸ்லிம் நிகழ்ச்சி*** ***திறந்த போட்டி***

***24.1 விடயம் : புராண படனம் - இலக்கிய அவை***

***24.2 விடயபரப்பு :***

*24.2.1 சமூகப் பெறுமதி மிக்கதாகப் புராண படனம் பொருள் கூறும் பாரம்பரிய நிகழ்த்துகைக்குப் புத்துயிரூட்டும் வகையில் 'புராண படனம் - இலக்கிய அவை' நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.*

*24.2.2 சீறாப்புராணத்தில் இருந்து இரண்டு அல்லது மூன்று பாடல்களைத் தெரிவு செய்து நிகழ்வின் உள்ளடக்கம் அமைக்கப்படல் வேண்டும்.*

*24.3* ***போட்டி விதிகள் :***

*24.3.1 முன்வைப்பு தெளிவாகவும், விளக்கமாகவும் அமைதல் வேண்டும்.*

*24.3.2 முன்வைப்புகள், புத்தாக்கமுடையவையாக அமைதல் வேண்டும்.*

*24.3.3 கர்நாடக சங்கீத இராகங்களைத் தழுவியதாக இருத்தல் அல்லது புதிய இசை வடிவமாக இருத்தல் அல்லது விருத்தமாக இருத்தல் (பாவோதல் மரபு) அல்லது கஸீதா மரபைத் தழுவியதாக இருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று அல்லது இரண்டினைப் பயன்படுத்தி பாடலினை முன்வைக்க முடியும்.*

*24.3.4 பின்னணி இசைக்காகப் பொருத்தமான இஸ்லாமிய வரையறைக்குட்பட்ட இசைக் கருவிகளைப் பயன்படுத்த முடியும். (மேடைக்கு முன்னாலிருந்தே இசை வழங்குதல் வேண்டும்)*

*24.3.5 ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவிகள், இசைக்கூறுகள் பயன்படுத்தப்பட முடியாது.*

*24.3.6 பாத்திரங்கள் பின்வருமாறு அமைதல் வேண்டும்.*

| | | |
|---|---|---|
| *புராணம் பாடுவோர்* | - | *02 அல்லது 03 பேர்* |
| *பொருள் கூறும புலவர்* | - | *02 அல்லது 03 பேர்* |
| *வினா எழுப்பும் அவையோர்* | - | *02 அல்லது 03 பேர்* |
| *புத்தாக்கப் பாத்திரம்* | - | *01 அல்லது 02 பேர் (தேவையெனின்)* |

*24.3.7 நிகழ்ச்சி தொடங்கி முடியும் வரை திரையை மூடித் திறத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.*

*24.3.8 இஸ்லாமிய கலாசார ஆடை அணிகள் பயன்படுத்தப்படலாம்.*

*24.3.9 முன்வைப்புகள், எந்தவகையிலும் எவரையும் புண்படுத்தக் கூடாது.*

*24.4* ***நேரம்*** *: 15 – 20 நிமிடங்கள்*

*24.5* ***புள்ளித்திட்டம்*** *:*

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | *கருத்தும் புதுமைத்துவமும்* | *25* |
| 2 | *புராணப் பாடல் - கதை கூறும் ஆற்றல்* | *20* |
| 3 | *வெளிப்படுத்தும் தாக்கமும் உணர்வும்* | *20* |
| 4 | *ஒழுங்கமைப்பும் முகாமையும்* | *20* |
| 5 | *உத்திகள்* | *10* |
| 6 | *நேரம்* | *05* |
| | *மொத்தம்* | *100* |



***எம்.என். ரணசிங்க***
*செயலாளர்*
*கல்வி அமைச்சு*
*'இசுருபாய'*